# பண்பாடும் கல்வியும்

திருமதி.ஜெ. இராசநாயகம்

**ஆய்வுச்சுருக்கம்**

*கல்வி முறைகள் நாட்டினுடைய பண்பாட்டின் அடித்தளத்தில் இருந்து உருவாக்கப்படுவது போலப் பண்பாடும் நாட்டின் கல்வி முறையோடு தொடர்பு பட்டு வளர்ந்து வந்துள்ளது. பண்பாட்டிற்கும் கல்விக்கும் இடையில் உள்ள தொடர்பு மிகப்பழமையானது என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. நவீன கல்விச்சிந்தனைகளும் பண்பாட்டுக் கல்வியை வலியுறுத்துகின்றன. கல்வியின் மூலம் அறிவினை மட்டும் வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாது ஒருவனுடைய மானுடப் பண்பும் மேலோங்கிச் செல்ல வேண்டுமென்பதை இவ் ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது.*

**அறிமுகம்**

ஒரு நாட்டினுடைய கல்வி அந்நாட்டின் பண்பாட்டின் அடித்தளத்திலிருந்து அமைதல் சிறப்பானதாகும். நாட்டினுடைய சிறப்பான எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும். நாட்டினுடைய திட்டங்களிலும் செயன் முறைகளிலும் கல்விக்கு முதன்மையான இடத்தைப் பெற்றுக் கொடுத்தல் முக்கியமான அம்சமாகும். மனிதன் தன்னுடைய வாழ்விற்குத் தேவையான நல்ல பண்புகளைத் தான் கல்விகற்கும் காலத்திலேயே தன்னிடத்தில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். சிறந்த திட்டமிட்ட கல்வியைப் பெற்றுக் கொள்ளும் போது மனிதன் தன் இயல்பைப் பக்குவப் படுத்திக் கொள்வதோடு சிறந்த பண்பு களையும் வளர்த்துக்கொள்கிறான் பணம், புகழ், சுகம், உத்தியோகம் போன்றவைகளை மட்டும் பெற்றுக் கொள்வதைக் குறிக்கோளாகக் கருதாமல் நற்பண்பு, நன்னடத்தை, தூய்மை, புலனடக்கம், கருணை, சேவை போன்ற குணங்களுடன் வாழ்வதற்குப் பண்பாடு வழிகாட்டுகின்றது. இத்தகைய பண்பாட்டை வளர்த்தலில் கல்விக்கும் கணிசமான அளவு பங்குண்டு.

**பண்பாடு பற்றிய விளக்கம்**

பண்பாடு என்ற சொல் பண்படு என்ற வினையடியிலிருந்து தோற்றம் பெற்றுள்ளது. பண் என்பது, இசை , உருவாக்குதல் , செய்தல் என்ற பொருள்களையுடையது. பாடு என்பது ஒழுக்கம், முறைமை, பயன் போன்ற பொருள்களையுடையது. ஆகவே ஒழுக்கத் துடன் இசைந்து வாழ்தலே பண்பாடு எனப்படும். இத்தகைய பண்பாட்டை வளர்த்தலில், செம்மையாக்குதலில் கல்விக்குப் பெரும் பங்குண்டு. இக் கல்வியைக் கற்றவர்கள் பண்பாளர்களாகின்றார்கள். இத்தகைய பண்பாடு என்பது ஒவ்வொருவரினதும் உள்ளத் தோடு தொடர்புடையது. உள்ளத்தின் செம்மை, உயர்வு போன்றவைகளைக் குறிக்கின்றது. செம்மையின் பால் சிந்தனையைச் செலுத்துவது பண்பாடு என்றால் அப்பண்பாட்டினை மேலும் வளர்த்தலில் கல்வியும் கல்வியினை வளர்த்த லில் பண்பாடும் உதவுகின்றது. இதனால் இரண்டின் வளர்ச்சியும் ஒன்றிலொன்று

தங்கியுள்ளது எனலாம். இத்தகைய பண்பாட்டின் வளர்ச்சியில் பல படி நிலைகள் உண்டு. இத்தகைய பண்பாட்டின் வளர்ச்சிக்குக் கல்வியும் பெரும் பங்காற்றியுள்ளது.

- தனி மனிதனுடைய உணர்வுகளும் செயல்களும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியுறுதல்.
- தனி மனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமூகங்களின் பண்பட்ட முன்னேற்றம்.
- சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பிண்ணிப் பிணைந்து இயங்கும்போது உருவாகும் வாழ்க்கை நெறி[2]. இத்தகைய படி நிலைகளை எடுத்து நோக்கும் போது ஒவ்வொன்றினதும் வளர்ச்சியிலும் கல்வியின் பங்களிப்பு இருப்பதனை ஊகிக்க முடிகின்றது. மனிதனது உள்ளத்து உணர்வுகள் பண்படுத்தப்பட்டு செம்மை நலமுறுவதே பண்பாடாகும். பகைவர் மனமும் நோகாதபடி வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாடு சிறப்பானது. இத்தகைய பண்பாட்டினைக் கல்வி வளர்த்தலின் மூலம் அது பெருமை பெறுகின்றது[3]. பண்பாடு என்பது தொன்மையுடையதும் பெருமையுடையதுமாகும். பண்பாட்டினை வளர்த்துச் செல்லுதலில் சமயங்கள் கணிசமான இடத்தினைப் பெற்றுக் கொள்கின்றன. சமயத்தின் மூலம் பண்பாடும், பண்பாட்டின் மூலம் சமயமும் வளர்ந்து செல்வதனால் இரண்டின் வளர்ச்சியும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. பண்பாடு என்ற சொல்லினுள்ளே பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற சொற்களும் அடங்கி விடுகின்றன. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவதாகும்" அத்தோடு பண்பாடு என்பது ஓர் இனத்தவரின் கொள்கைகள், கோட்பாடுகள். நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் என்பவற்றையும் குறிக்கின்றது[4].

**பூர்வீககாலக் கல்வியும் பண்பாடும்.**

பூர்வீககாலக்கல்வி முறையினை எடுத்து நோக்கும் போது சமயத்திற்கும் கல்விக்கும், பண்பாட்டிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்ததனை அவதானிக்க முடிகின்றது. அக்காலத்தில் வழங்கப்பட்ட கல்விமுறை முற்றுமுழுதாகச் சமயம் சார்ந்ததாகவே இருந்தது. கல்வி நடவடிக்கைகளில் சமயம் முக்கிய இடத்தைப் பிடித்தது. குறிப்பாக இந்துக்கல்வி முறையானது சமயக்கல்விக்கு முக்கிய இடத்தைக் கொடுத்த அதேவேளை பண்பாட்டையும் வளர்த்துச் செல்வதாக அமைந்தது. ஆகவே கல்வியின் மூலம் பண்பாடும் பண்பாட்டின் மூலம் கல்வியும் வளர்ந்த முறையினை அறியமுடிகின்றது.

பண்டைய காலக் கல்விமுறை குருகுலக் கல்வி முறையாகும். குருவின் இல்லத்தில் தங்கியிருந்து கல்விகற்கும் மாணவனின் கல்வி நடவடிக்கைகளுக்கு மட்டுமல்லாமல் ஒழுக்கச் செயற்பாடுகளுக்கும் குருவே பொறுப்பான வராக இருந்தார். கல்வியில் ஒழுக்கமே முதன்மையான இடத்தைப் பெற்றது. குருகுலக் கல்வி முறையில் ஆசிரிய, மாணவ உறவு புனிதமாக இருந்தது. குருகுலங்களிலும் ஆசிரமங்களிலும் மாணவர்கள் ஆசிரியரின் குடும்பங்களுடன் தங்கியிருந்து கல்வி கற்றனர். அந்நிலையில் குருவிற்கும் சீடனுக்கும் இடையிலுள்ள உறவுமுறை தந்தைமகன் போன்று அமைந்திருந்தது[5]. சீடன் சிறந்த பண்புகள் நிறைந்தவனாகக் குருவிற்குக் கீழ்ப்படிந்து கல்வி கற்றான். கல்வியானது அன்பு, அறிவு,

பொருள், இம்மை, மறுமை, இன்பம் போன்ற விழுமியங்களையெல்லாம் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. எழுத்து அறிவித்தவனை இறைவனாகக் கருதிய இந்துப்பண்பாடு ஒழுக்கத்திலும் தம் ஆசிரியர்களைப் பின்பற்றி வாழுகின்ற மாணவர்களை உருவாக்கியது. மாணவர்களின் முயற்சிக்கேற்ப ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஆசிரியர்கள் பாடம் சொல்லும் முன்பு இறை வணக்கம் சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்கும் நிலையும் இருந்தது. எந்தவொரு செயலைத் தொடங்கினாலும் அதில் தடை ஏற்படாமல் முயற்சி திருவினையாக அமைய வேண்டும் என்று மனத்தை ஒரு வழிப்படுத்தி வழிபடும் நிலையும் உண்டு. இறைவணக்கம் செலுத்தும் போது உள்ளம் ஒடுங்கிய நிலையில் குருவும் சீடர்களும் இறைவணக்கச் சொற்களைக் கூறி வழிபட்டார்கள். உபநிடதத்தில் குருவும், சீடர் களும் கற்றலில் இணக்கத்தோடு ஈடுபட வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கும் நிலையும் உண்டு. மாணவர்கள் தாம் கற்ற அறிவின் மூலம் ஆசிரியர்களிடம் மிகவும் பணிவுள்ளவர்களாக நடந்த தன்மையைக் காணமுடிகின்றது[8]. இவ்வகையில் கல்வியானது பண்பாட்டைக் காத்து வளர்த்துச் செல்வதோடு எதிர்காலச் சந்ததியினரிடம் அவற்றைக் கையளித்துச் செல்லுகின்ற பாரியதொரு பணியையும் செய்கின்றது.

நால்வகை வேதங்கள், புராண இதிகா சங்கள், கணிதம், அரசியல், பொருளியல், நுண்கலைகள், வானவியல் போன்றவைகள் பாடத்திட்டங்களாக அமைந்திருந்தன. மேற் கூறப்பட்ட விடயங்கள் பல இந்துப் பண் பாட்டோடு தொடர்புபட்டதாக அமைந்துள்ளன. ஆகவே பூர்வீக காலத்தில் கல்வி நடவடிக் கைகள் இந்துப்பண்பாட்டை மேலும் வளர்த்துச் செல்லும் வகையில் அமைந்திருந்தன. ஆயினும் குருவானவர் எந்தவொரு சுயநன்மைக்காகவும் இத்தகைய கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட வில்லை. ஆனால் மாணவர்கள் விரும்பும் பட்சத்தில் குருவை வணங்கி அவரிடமிருந்து ஆசீர்வாதம் பெற்றுப் பின்னர் தானம் வழங்கும் முறையும் காணப்பட்டது. ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் பணம் சம்பந்தமாக வேறெந்த ஒரு தொடர்பும் இருந்ததில்லை[7]. மாணவர்கள் காலத்தை முதற்பொருளாகக் கருதிக் காலந்தவறாது ஆசிரியரிடம் சென்று பாடம் கேட்டனர். ஆசிரியர்களும் தெளிந்த அறிவும் கூர்மையான புத்தியும் போதனா முறையில் சிறந்தவர்களாகவும் விளங்கினர்.

"ஈதல் இயல்பே இயம்புங்காலை
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
வரையாள், வெகுளாள், விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்கை அறிந்து அவன் உளம்
கொள்ளக்
கோட்டமில் மனத்தினூல் தொடுத்தலென்ப"[8].

ஆசிரியரிடம் பாடம் கேட்கும் மாணாக்கர் ஆசிரியரைக் கண்டதும் எழுந்து நின்று வணக்கம் கூறி அவரது இருக்கையை ஒழுங்கு செய்து, ஏடு எழுத்தாணி போன்ற துணைக் கருவிகளையும் உரிய இடத்தில் வைத்துவிட்டு அடக்கமாக ஆசிரியர் கட்டளையை எதிர் நோக்கி இருப்பர். இது ஆசிரியத்துவத்திற்கு மதிப்பளிக்கும் ஒரு செயலாகும். குருவிற்கு மதிப்பளிக்கும் நிலை எல்லாப் பண்பாட்டிலும் இருக்கின்ற போதிலும் இந்துப்பண்பாடு இந்திய பண்பாட்டின் அடித்தளத்தில் இருந்து உதித் தமையால் குருசீட முறை மிகவும் இறுக்கமான

பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இருந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. இந்தியப் பண்பாட்டில் சிறந்த குருசீடர்களாக இருந்தவர்களின் வரலாறு தொடர்பான பல விடயங்கள் உண்டு.

நூல் பயல இயல்பே, நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்
ஆசாற்சார்ந்து அவை அமைவரக் கேட்டல்
அம் மாண்புடையோர் தம்மொடு பயில்தல்
வினாதல், வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம் நனியிருக்கும்" 9.

மாணவன் காலை அநுட்டானங்களை முடித்து உரிய நேரத்துக்குப் பள்ளிக்கூடம் சென்றான். சென்றதும் குருவை வணங்க வேண்டும். ஆசிரியரின் குறிப்பறிந்து நடக்கக் கற்றுக் கொண்டான். பாடம் நடக்கும் போது அடக்கமாக இருந்து ஆசிரியரின் உபதேசத்தை செவியால் உள்வாங்கி நெஞ்சாகிய களஞ்சியத் திலே விடாது அதை உள்ளத்தால் உன்னி உன்னிப் பார்த்து தனது ஆக்கிக்கொள்வது மாணவனுக்கு பயன் தரும் நடவடிக்கையாக அமைந்தது. இவ்வகையில் சிறந்த பண்பாடு களை மாணவனுக்குப் போதிப்பதாகக் கல்வி அமைந்தது. ஒருவனுடைய சிந்தனையையும், செயற்பாடுகளையும், பண்புள்ளதாக மாற்றி அவனுடைய ஆளுமையையும் வளர்ப்பதாகக் கல்வி செயற்படுகின்றது. மனிதத்தன்மை யினை மனிதனுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த குணங்களை மனிதர் பெற்று உயர்வு அடைந்து சமூக விழுமியங்களைப் போற்றி பாதுகாத்து வளர்ப்பதற்குக் கல்வி வழிகாட்டுகின்றது. இவ்வாறு பண்புடைமையாகிய உயர்ந்த விழுமியத்தைக் கல்வி வளர்க்கின்றது என்ற வகையில் கல்விக்கும் விழுமியங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு எனலாம். உலகத்தின் உயர்ந்த பண்புகள் கல்வியினால் வளர்க்கப்படுகின்றன. ஒருவர் மற்றவரோடு மொழி மூலம் தொடர்பு கொள்ள வும், சமூகப் பழக்கத்தில் மேன்மையடையவும், உவப்பத்தலை கூடவும், கல்வியில் எழுந்த பண்பாடு முக்கியம் ஆகின்றது. பண்பு என்ற உயர்ந்த விழுமியம் கல்வியால் வளர்க்கப்படு கின்றது என்ற வகையில் கற்றவன் என்றவன் பண்புடையவன் ஆகின்றான்.

**கல்வியும் பண்பாடும்**

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டுவது பண்பாடாகும். இத்தகைய பண்பாடு மனிதனை விலங்குகளினின்றும் வேறுபடுத்துகின்றது. அன்புகாட்டு, தொண்டு செய், தானம் செய், நல்லதையே செய் என்ற சிறந்த செயல்களைச் செய்தல் மூலம் சிறப்பான பண்பாட்டை சமுதாயத்தில் வளர்க்கலாம். 10. இதற்கு மிகவும் உறுதுணையாக்க் கல்வி விளங்குகின்றது. மனித வாழ்க்கையும் இத்தகைய சிறந்த கொள்கைகளின் வழியே நடைபெற வேண்டும் என்று கல்வியும் வலியுறுத் துகின்றது.

பண்பாடு சுட்டும் முக்கிய விழுமியங்களில் ஒழுக்கம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பூர்வீககாலக் கல்வி முறையை எடுத்து நோக்குகின்ற போது கல்வி நடவடிக்கைகள் யாவும் ஒழுக்கத்தையே மையமாகக் கொண்டு அமைந்து இருந்தன. குருவின் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்கும் சீடனின் கல்விக்கு மட்டுமல்லாமல் ஒழுக்கச் செயற்பாடுகளுக்கும் குருவே பொறுப்பானவராக இருந்தார். சிறந்த

பண்பாடு மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

மனிதகுல வளர்ச்சியின் வரலாற்றில் பல தீர்க்க தரிசிகளும் பெரியோர்களும் தோன்றிப் பல புதிய வழிகளைக் காட்ட முயன்றனர். அவர்களுடைய சிந்தனையின் வழியில் மனித குலம் உண்மை, நேர்மை, மனித நேயம், அன்பு போன்ற விழுமியங்களின் சிறப்பை புரிந்து கொண்டது. கல்வியின் மூலம் ஒருவனிடம் உள்ள அகங்கார, மமகாரதன்மைகள் நீக்கப்பட வேண்டும். மனிதன் கீழ்ப்படிவுத் தன்மையுள் ளவனாக வாழ்ந்து, மற்றையவர்களையும் அம் முறையைப் பின்பற்றி வாழச் செய்பவனாக மாற்றும் போது சமூகத்தில் அமைதி நிலவும். "முதலில் வேலைக்காரனாக இருக்க கற்றுக் கொள்.அதன்பின் எஜமானனாகும் தகுதி உனக்கு வந்து சேரும். "என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். இதன் மூலம் ஒருவருடைய மனம் பண்பட்டு விடுகின்றது என்று சுவாமி அவர்கள் கருதிக் கொள்கின் றார்கள். அது போன்று எந் நிலையிலும் ஒழுக்கம் தவறாது வாழவேண்டும் என்பதை இந்துப் பண்பாடு போதிக்கின்றது. கல்வி முறைகளும் இத்தகைய ஒழுக்கமாகிய பண்பாட்டினை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் முறையை எடுத்துக் காட்டுவனவாக அமைந்து விடுகின்றன. இவ்வகையில் கல்வி நடவடிக்கை யில் பண்பாடு என்ற அம்சமும். பண்பாட்டில் கல்வி என்ற அம்சமும் இணைந்து காணப்படு கின்றன. பண்பாட்டினை போதிக்காத கல்வியி னால் எவ்வித பயனும் இல்லை.'

பண்பாடு ஒவ்வொருவனையும் சிறந்த பண்புள்ளவனாக மாற்ற முற்படுகின்றது. நன்ன டத்தை எப்பொழுதும் ஒருவனுக்கு சமூகத்தில் பெரும்மதிப்பை உண்டு பண்ணுகின்றது. நல்ல நடத்தை என்பது ஒருவனுக்கு பெற்றோரிடம் இருந்தும் அயலவரிடம் இருந்தும் கூடுதலாகக் கிடைக்கின்றது. எனவே ஒருவன் கல்வி மூலம் அறிவை மட்டும் பெற்றுக் கொள்ளாமல் வாழ்க்கையை நல்ல முறையில் வாழப்பழக வேண்டும். வாழ்க்கையைச் சிறந்த இலட்சியத் தின் அடிப்படையில் வாழும் பொழுது திருப்தியும் இன்பமும் ஏற்படுகின்றன.

கல்வி என்றவுடன் பொதுவாக ஒருவனு டைய எதிர்காலம், உத்தியோகம், புகழ், கௌரவம் போன்ற நிலைகளோடு தொடர்பு படுத்தியே சிந்திக்க முடிகின்றது. உண்மையில் கல்வி என்பது பண்பாட்டை உருவாக்கு வதற்கான, சமூகத்தை வளப்படுத்து வதற்கான ஒரு வழி என்றே கருத முடிகின்றது. பூர்வீககாலத்தில் குருகுலத்தில் தங்கியிருந்து குருவிடம் கல்வியையும், சிறந்த பண்பாட்டி னையும் கற்ற மாணவன் குருகுலத்திலிருந்து வெளியே வரும்போது நிறை மனிதனாக இருந்தான். அவர்கள் சமுதாயத்தில் சிறந்த அங்கத்தவர்களாக வாழ்ந்தனர். அவர்களால் வாழ்க்கையைச் சிறப்பான முறையில் எதிர் கொள்ள முடிந்தது. இந்த முழுமையான கல்வியின் மூலம் மருத்துவத்தில் சரகர் சுச்நதர், வனவியலில் ஆரியப்பட்டர், பாஸ்கரர், கணிதத் தில் பாஸ்கரர், லீலாவதி, ஜோதிடத்தில் வராஷமிஹிரர். அரசியலில் சாணக்கியர் என்று ஒரு மேதைகளின் பட்டியலைப் பார்க்க முடிகின் றது."

**இன்றைய கல்வி முறை**

அண்மைக் காலக் கல்வியியலாளர்களும் மனிதநேயக் கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றார்கள். கல்விச் சீர்திருத்த நடவடிக் கைகள் மனித மேம்பாட்டுக் கல்விக்கு அதிக முக்கியம் கொடுத்து வருகின்றது. மனித நேயக்

கருத்துக்கள் மனித ஒருமைப்பாட்டுக்கு அவசியமானதெனக் கருதினார்கள். இன்றைய நூற்றாண்டில் மனிதகுலம் பல கொடுமைக ளுக்கு ஆளாகியிருந்தபோதிலும் பல புதிய விழுமிய சிந்தனைகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. இத்தகைய சிறந்த விழுமியங்களை வளர்ப்பதில் கல்விக்கும் முக்கிய பங்குண்டு. விழுமியங்களில் இருந்து முற்றாக விடுபட்ட முறையில் கல்விமுறைகள் இயங்க முடியாது. சிறந்த விழுமியங்களைக் கல்வியினூடாக மாணவர்களுக்கு வழங்க முற்படும் போது சிறந்த பண்பாட்டுக் கல்வியை மாணவர்களுக்கு ஊட்ட முடிகின்றது. இதன் மூலம் மாணவர்கள் தமது நடத்தைகளைச் சமூக, கலாசார நியமங்களுக்கேற்பத் திருத்தி அமைத்துக் கொள்ள முடிகின்றது. இத்தகைய ஒழுக்க விழுமியங்களைத் தனித்துப் போதனை முறையில் மட்டுமல்லாமல் உரையாடல் வடிவிலும் மேற்கொள்ளலாம்[6] என்றும் இதன்மூலம் சீரிய சிந்தனைகள் மாணவர்களால் உள்வாங்கப்படும் என்றும் தற்காலக் கல்வியியலாளர்கள் கருதிக் கொள்கின்றார்கள். எனினும் இன்றைய காலக் கல்வி முறையை எடுத்து நோக்குகின்றபோது கல்வியானது சிறந்த விழுமியங்களை ஒருவனி டத்தில் வளர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொள்ளாமல் அறிவை மட்டும் முக்கியமாக வளர்ப்பதை நோக்காகக் கொண்டுள்ளது என்று கருதப்படுகின்றது. போட்டியும், பொறாமையும், சுரண்டல்களும் கல்வியுலகில் மலிந்து வருகின்றன. இன்றைய கல்விமுறை மக்கள் மத்தியில் அமைதியையும் சமாதானத்தை யும் கொடுக்கவில்லை. அதனால் மாற்றுக் கல்விமுறை வேண்டும் என்று இன்று பலரும் உணரத் தொடங்கியிருக்கின்றார்கள். இதே போன்று மேலைநாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தேவாலயங்கள் ஒழுக்க கல்வித்திட்டத்தை தீர்மானித்தனர். மிகவும் கட்டுக்கோப்பான முறைகளுடன் திறமையாக அவற்றைச் செயற்படுத்தின.ஆனால் இன்று இவைகள் எல்லாவற்றையும் மீறி குற்றங்கள், வன் முறைகள், ஒழுக்கக்கேடுகள் போதைப்பழக்கம், குடும்ப வாழ்க்கையின் தகர்ச்சி போன்றவைகள் நாட்டில் மலிந்து காணப்படுகின்றன. ஆகவே கல்விமுறை நன்கு திட்டமிடப்பட்டு வகுக்கப் படல் வேண்டும்.[7]

சிறந்த கல்வி சிறந்த பண்பாட்டை வளர்த்தல் முக்கியமாகும். இன்றைய மனிதர்கள் புலனின்பங்களை அளவுக்கு அதிகமாக அனுபவிப்பதைத் தவிர்த்தல் வேண்டும். போதைவஸ்து போன்ற தீயபழக்க வழக்கங் களால் உடல்வலிமை குன்றுகின்றது. இதனால் அறிவுத்திறனை அவர்கள் மத்தியில் வளர்க்க முடியவில்லை. இவ்வாறான தீயபழக்கங்கள் ஆன்மீக உணர்வை வளரவிடாமல் தடுக்கின் றன. இவைகளைத் தவிர்த்து மனிதர்கள் உயர்ந்த இலட்சியமுடையவர்களாக அவற்றைப் பெறுவதற்கு முயல வேண்டும். சிறந்த கல்வியின் மூலம் சிறந்த பண்பாட்டினைத் தன்மத்தியில் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவன் தான் பெற்ற கல்வியறிவின் மூலம் புலன்கள் அனைத் தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயல வேண்டும். அந்நிலை ஏற்படும் போது அவ்வாறாக வாழும்போது ஒருவன் சிறந்த பண்பாடு உள்ளவனாகக் கருதப்படுகின்றான். இவ்வாறு சிறந்த பண்புள்ளவனாக வாழ வேண்டுமானால் கல்வி அவனைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டும். இன்றைய கல்வி முறை மனிதனை உருவாக்குவதாகவோ ஒருவனின் அகத்திறமைகளை வெளியே கொண்டு வருவதாகவோ அமையவில்லை

என்றே கூறமுடிகின்றது. வாழ்க்கையில் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்து பணம் சம்பாதிப் பதையே நோக்கமாகக் கொண்டு கல்வி ஊட்டப் படுகின்றது.[14]

கல்வி சிறந்த பண்புடையவர்களை உருவாக்க வேண்டுமானால் அது சில கோட் பாடுகளின் அடிப்படையில் இயங்கவேண்டும். அகமாற்றம் என்பது ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமானதொன்றாகும். ஒவ்வொருவரும் தம்முடைய முழு வாழ்க்கையையும் மாற்றி அமைத்து ஒரு புதுயுகத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தம்மையே தியாகம்செய்து படைப் பாற்றல் தம்மூலமாக வெளிப்படுவதற்கு ஏற்ற வகையில் வாழ்ந்த சான்றோர்களே புதியவற்றை கண்டு பிடித்தார்கள். அவர்கள் உலகிற்கு அளித்த உண்மைகள் மனித குலத்திற்கு வரப் பிரசாதமாக அமைந்தன. அவர்கள் காட்டிய வழி இந்துப்பண்பாடும் வளர்ந்து கொண்டே செல்கின்றது.[15] "மனிதனிடம் ஏற்கனவே உள்ள நிறை நிலையை வெளிப்படுத்துவதே கல்வி" என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும்.[16]

இத்தகைய நிறை நிலைகளில் சிறந்த பண்பாடும் ஒன்றாகும். ஆகவே சிறந்த பண்பு உள்ளவனாக ஒருவனை மாற்றி இந்தச் சமுதாயத்திற்கு உரியவனாக அவனை ஆக்கி விடுவதும் கல்வியாகும். சிறந்த நல்லொழுக் கமும் மனிதனுடைய வளர்ச்சிக்குத் துணை புரிகின்றது. அதே போன்று அன்பு என்பதும் சிறந்த விழுமியங்களில் ஒன்றாகப் போற்றப் படுகின்றது. இந்துப்பண்பாடு அன்பு பற்றி மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மனிதனின் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் எல்லாம் அன்பு என்பதைச் சார்ந்தே உள்ளது. மனித உணர்ச்சி களில் மிகுந்த ஆற்றல் வாய்ந்தது அன்பாகும். கலை, கலாசாரம், சமுதாய வாழ்க்கை என்று அனைத்திற்கும் பின்னால் தூண்டு சக்தியாக விளங்குவது அன்புதான். மனித வாழ்க்கையில் சில இடங்களில் அளவு கடந்த அன்பு துயரத்தை யும் ஏற்படுத்திவிடுகிறது. ஆனால் அதே வேளையில் சமுதாய தேசிய உலக அளவிலான பிரச்சினைகள் பலவற்றிற்கும் தீர்வாக விளங்கு வதாகவும் அன்பு அமைகின்றது. உண்மையான அன்பு ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண் டது. மனிதனையும் மனிதனையும் ஒருங்கி ணைக்கின்றது. சமுதாய வாழ்க்கையின் அடிப் படையாக விளங்கும் குடும்பத்தில் இருந்து அன்பு முதலில் ஊற்றெடுத்துப் பரவுகின்றது. குடும்பம், சமூகம், நாடு, தேசம் என்ற வகையில் அது வியாபிக்கின்றது. அதற்குக் காரணமாக உறுதுணையாக விளங்குவது கல்வியாகும்.

இதனை அடியொற்றி சுவாமி விவேகானந்தர் அன்பை அடிப்படையாக கொண்டே ஒருவனுக்கு கல்வி அளிக்கப்பட வேண்டும் என்கிறார் கல்வி பல வழிகளில் அன்பை வெளிப்படுத்துவதோடு அதனை வளர்த்துச் செல்கின்றது. இத்தகைய அன்பு நல்லொழுக்க வாழ்க்கையை வாழ வைப்பதா கவும் அமைகின்றது. நல்லொழுக்கம் பற்றிய பல கருத்துக்கள் கல்வி உலகிலே தொன்று தொட்டுத் தொடர்ந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

### முடிவுரை

பண்பாடு என்பது தொன்மையானது. பண்பாட்டின் அடித்தளத்திலேயே மனித வாழ்க்கை கட்டி எழுப்பப்படுகின்றது. இன்றைய கால கட்டத்தில் பண்பாடு என்பது ஒருவனை வளர்க்கின்ற காரணிகளில் ஒன்றாக இருக்

கின்ற போதிலும் மறுபுறம் அது அழிந்து போய் மனித இனம் மனிதனுக்குரிய மாண்பை இழந்து விடுமோ என்ற பயமும் ஏற்படுகின்றது. எனவே இத்தகைய பண்பாட்டை ஒவ்வொருவரும் தமக்கு அடுத்து வரும் தலை முறையினரிடம் ஒப்படைத்துச் செல்லும் பாரிய பணியை கல்வி ஆற்றுகின்றது, என்ற வகையில் பண்பாட்டை வளர்த்து செல்லுதலில் கல்விக்குக் கணிசமான அளவு பங்குண்டு என்று கூறலாம்.

நவீன காலத்தில் மனிதத் தன்மையை அழித்து ஒழிக்க `முயலும் பல சக்திகள் இனங் காணப்படுகின்றன. இவைகள் எதிர்காலச் சந்ததியினரை மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே கல்வி அறிவு சார் மேம்பாட்டிற்கு மட்டும் உதவினால் அது போதாது. கல்வியின் நோக்கம் பிள்ளை களின் "சகல விதமான விருத்தி "என்ற உயரிய நோக்கத்தை நிறைவு செய்வதாக அமைய வேண்டும்.[17] இதன் மூலம் எதிர்காலச் சந்ததியினர் சிறந்த ஒழுக்க விழுமியமுள்ள வராக மாற்றியமைக்கப்படுவர்.

## அடிக்குறிப்புகள்:


1. மீனாட்சி சுந்தரனார். பொ; 1973, தமிழும் பிற பண்பாடும், சென்னை
2. பரம சிவானந்தம் மு; 1966, சமுதாயமும் பண்பாடும், தமிழ்கலைப் பதிப்பகம், சென்னை
3. திருநாவுக்கரசு.த; 2001, தமிழ்பண்பாடு, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,
4. சந்திரசேகரம், ப; 1987, கல்வியற்கோவை, கல்விக்கழகம், யாழ் பல்கலைக்கழகம், ப.9.
5. Nesiah. K;1981, **Education and the Advancement of Human Rights in Sri Lanka Kalaignanam** First Edition, p.1.
6. கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1988, **சைவநெறி ஒன்பதாம் ஆண்டு**, பக். 99–100.
7. இலங்கை கல்வி கலாசார அலுவல் அமைச்சு; 1969, இலங்கையிற் கல்வி, தொகுதி III கொழும்பு பக் 1295 – 1296.
8. மு.கூ. சந்திரசேகரம். ப; ப.8
9. மே.கு, ப.10
10. கோவிந்தன் கா; 1999 , தமிழர் பண்பாடு, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை,
11. பஜனானந்தர்; 2004 , கல்வியேவழி, ஸ்ரீ இராம கிருஸ்ணமடம், சென்னை, ப.19
12. சந்திரசேகரன் சோ; 1995, புதிய நூற்றாண்டுக்கான கல்வி, தர்ஷனா பிரசுரம் கொழும்பு, ப.33.
13. சுவாமி சிவானந்தா, ஒழுக்க நெறிக்கல்வி, தெய்வீக வாழ்க்கைச் சங்கம். இராசிபுரம், நாமக்கல், ப.3
14. பஜனானந்தர் மு.கூ .கல்வியேவழி, நூல் ப. 186.
15. மே.கு, ப.180
16. மே.கு, ப.58
17. மு.கூ.சந்திரசேகரன். சோ. ப.35.